Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத வருடம் ஆனி மீ 19 ஆம் உ செவ்வாய்க்கிழமை (03 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஜ் 9 ஓசை 135

## வீரமுனையில் 84 இளைஞர்கள் இராணுவத்தால் சுட்டுக் கொலை!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் வீரமுனை என்னுமிடத்தில் கடந்த சனிக்கிழமை சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் 84 இளைஞர்களை கைது செய்து முகாமிற்குள் கொண்டு சென்றனர். பின்னர் இந்த இளைஞர்கள் அனைவரையும் சுட்டுக் கொன்றுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கல்முனைப் பகுதியில் தமிழ் இளைஞர்கள் சுற்றிவளைத்துக் கைது செய்யப்படுகின்றனர். இவர்களை விடுதலை செய்யக் கோரி தாய்மார்கள் மூன்று தினங்களுக்கு முன் ஆர்ப்பாட்டம் செய்தது குறிப்பிடத்தக்கது.

## 4 நிபந்தனைகளையும் ஏற்காவிடில் இருவாரத்தில் எம்.பி.பதவிகள் துறப்பு!

### - ஈரோஸ் பாலகுமார் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

இரண்டு வாரங்களில் தாம் கொடுத்த நான்கு நிபந்தனைகளையும் நிறைவேற்றாவிடின் தமது பாராளுமன்ற ஸ்தானங்களை ராஜினாமா செய்துவிட உள்ளோம் என ஈழவர் ஜனநாயக முன்னணி அமைப்பின் செயலாளர் நாயகமான வே. பாலகுமாரன் தெரிவித்தார்.

தமது ஈழவர் ஜனநாயக முன்னணி கட்சியின் சார்பில் ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்களும் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி பிரேமதாசாவை சந்தித்து தமது தீர்மான அறிக்கையை சமர்ப்பித்துள்ளதாகவும் தாம் சமர்ப்பித்த கோரிக்கை நிறைவேற்றப்படுவதற்கு இருவாரங்கள் காலக்கெடு கொடுக்கப்பட்டுள்ளதுடன் அதுவரைக்கும் பாராளுமன்றத்திற்கு சமுகம் தருவதில்லை எனவும் அதன்பின்பு பதவியை ராஜினாமா செய்ய உள்ளதாகவும் திரு. பாலகுமாரன் தெரிவித்தார்.

தமது அறிக்கையின் பலனாக நேற்று ஜனாதிபதி தமது பிரதிநிதிகளை அழைத்து இவ்வறிக்கை பற்றி கலந்தாலோசித்ததாகவும் அவர் கூறினார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளுடன் பேச தயார் யுத்தம் ஒருபுறத்தில் நடக்கட்டும்

### - ரஞ்சன்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் விவாதிக்க அரசு ஆயத்த நிலையில் உள்ளதென்றும்; ஆனால் வடக்கு-கிழக்குப்பகுதியில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த தாம் தயாரில்லை என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர்கள் மத்தியில் நேற்று வடக்கு – கிழக்கு நிலைமைகள் தொடர்பாக விளக்கமளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் - போரும், விவாதமும் ஒரே நேரத்தில் நடப்பது சாத்தியம்தான் என்றும் கூறியுள்ளார்.

தொடர்ந்து அங்கு பேசிய அமைச்சர் யாழ். கோட்டை இராணுவ முகாமைச் சுற்றி மேற்கொள்ளப்பட்டுள்ள முற்றுகையை தமிழீழ விடுதலைப் புலிகள் கைவிடும் பட்சத்தில் அவர்களுடன்பேச்சுவார்த்தை நடத்த அரசு ஆயத்தநிலையில் உள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் நெருக்கடியைப் பயன்படுத்தி கொள்ளையினர் கைவரிசை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பரவலாக கொள்ளைகள் இடம்பெற்று வருவதாக விடுதலைப் புலிகளுக்கு கிடைத்த தகவலை அடுத்து கொள்ளையர்களை புலிகள் கைதுசெய்துள்ளனர்.

பட்டப் பகலில் குளிக்கச் சென்று விட்டுத் திரும்பி வந்து பார்த்தபோது வீட்டிலிருந்த சுமார் 75 ஆயிரம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மூவாயிரம் சிங்களவருக்கு துப்பாக்கி

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்கள் அடர்த்தியாக வாழும் பகுதிகளில் வசிக்கும் சிங்களவர்களுக்கு துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசு அறிவித்தது.

இதுவரை மூவாயிரத்திற்கு மேற்பட்டோருக்கு இத்துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## பாகிஸ்தானிடம் ஸ்ரீலங்கா அரசு உதவி கேட்கவில்லையாம்!

## இந்திய ராணுவ புதியதளபதி

(புதுடில்லி)

இந்திய இராணுவத்தின் புதிய தளபதியாக ஜெனரல் சுனில்பிரான்சிஸ் றொட்றிகஸ் நேற்றுப் பதவியேற்றார்.

## வீர மரணம்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறையில் 'சென்றிக்கு' நின்றிருந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர் மீது இராணுவம் மேற்கொண்ட

## 'வெந்த வீட்டில் பிடுங்கிய' இருவர் மாட்டிக்கொண்டனர்

(யாழ்ப்பாணம்)

குண்டுவீச்சினால் இடிந்த வீடுகள், கடைகளிலிருந்து பொருட்களைச் சேகரித்துக் கொண்டிருந்த இரண்டு நபர்கள் நேற்று விடுதலைப் புலிப் போராளிகளிடம் சிக்கினர்.

யாழ். மனோகராத் தியேட்டருக்கருகில் கடந்த வாரம் குண்டு வீச்சினால் சேதமடைந்த கடை ஒன்றிலிருந்து தவறவிட்ட பொருட்களை உரப்பை ஒன்றினுள் வாரிச் சுருட்டிக் கொண்டிருக்கும் போது ரோந்து சென்ற விடு

(4ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளியுறவு அமைச்சிடம் பேர்னாட் திலகரத்தினா உறுதி

(புதுடில்லி)

இலங்கையில் ஸ்ரீலங்கா அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் யுத்தத்தில் மூன்றாவது நாட்டின் உதவி எதையும் ஸ்ரீலங்கா அரசு கோரமாட்டாது என்று ஸ்ரீலங்கா அரசின் வெளியுறவுச் செயலர் பேர்னாட் திலகரத்தினா நேற்றுப் புதுடில்லியில் இந்திய வெளியுறவுச் செயலர் குபேரையும், வெளி

## விற்பனையில் மோசடி

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் உள்ள ஒரு சில வியாபாரிகள் கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்வதாக பொது மக்கள் குறை கூறுகிறார்கள்.

அத்தியாவசிய பொருட்கள் பால்மா வகைகள் என்பனவே இவ்வாறு கூடுதலானவிலைக்கு விற்கப்படுவதாக கூறப்படுகிறது.

சில வியாபாரிகளே பதுக்கல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (22)

## இடம்மாற்றம்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழைப் பகுதியில் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும்ஹெலி, பொம்மர் தாக்குதல்களா

தாக இலங்கை அரசு அறிவித்தது.

இதுவரை மூவாயிரத்திற்கு மேற்பட்டோருக்கு இத்துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இந்திய ராணுவ புதியதளபதி

(புதுடில்லி)

இந்திய இராணுவத்தின் புதிய தளபதியாக ஜெனரல் சுனில்பிரான்சிஸ்]றொட்றிகஸ் நேற்றுப் பதவியேற்றார்.

## வீர மரணம்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறையில் 'சென்றிக்கு' நின்றிருந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர் மீது இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஜக்சன் என்பவர் மரணமடைந்தார். அவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## அகதிகள் மீது ராணுவக்கெடுபிடி

(சாவகச்சேரி)

கொழும்பிலிருந்து தரை மார்க்கமாக யாழ்ப்பாணத்திற்கு வந்த அகதிகளின் வாகனம் ஒன்றையும், அகதிகளையும் தம்மிடம் ஒப்புவிக்கும்படி மதவாச்சி இராணுவமுகாமில் உள்ள இராணுவத்தினர் ஒருவர் கேட்டதோடு பெண் ஒருவரையும் பூட்ஸ் காலாலும், கையாலும் தாக்கினாராம்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பஸ்களில் அகதிகள்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து தமிழ் அகதிகள் பஸ்கள் மூலம் தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகின்றனர் என கொழும்பு பத்திரிகைகள் தெரிவித்தன.

## குரும்பசிட்டியில் இருவீடுகள் சேதம்

(தெல்லிப்பழை)

கடந்த வெள்ளிக்கிழமை காலை குரும்பசிட்டிப் பகுதியில் ஹெலிக்கொப்டரில் இருந்து மேற்கொள்ளப்பட்ட றொக்கட் தாக்குதலினால் இரு பெரிய வீடுகளின் ஒரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வங்கியின் சேவைக்கு பாராட்டு

(தெல்லிப்பழை)

கடந்த ஒருவார காலமாக யாழ்-மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான, பதற்றமான நிலைமைகளின் மத்தியிலும் தமது வாடிக்கையா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# உதவி கேட்கவில்லையாம்!

## 'வெந்த வீட்டில் பிடுங்கிய' இருவர் மாட்டிக்கொண்டனர்

(யாழ்ப்பாணம்)

குண்டுவீச்சினால் இடிந்த வீடுகள், கடைகளிலிருந்து பொருட்களைச் சேகரித்துக் கொண்டிருந்த இரண்டு நபர்கள் நேற்று விடுதலைப் புலிப் போராளிகளிடம் சிக்கினர்.

யாழ். மனோகராத் தியேட்டருக்கருகில் கடந்த வாரம் குண்டுவீச்சினால் சேதமடைந்த கடை ஒன்றிலிருந்து தவறவிட்ட பொருட்களை உரப்பை ஒன்றினுள் வாரிச் சுருட்டிக் கொண்டிருக்கும் போது ரோந்து சென்ற விடு

(4ஆம் பக்கம் பார்க்க)

## 'ஓ' நெக்கற்றிவ் இரத்தம் உடனடியாகத் தேவை

(வல்வெட்டித்துறை)

திருகோணமலையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலுக்குள்ளான பெண் ஒருவருக்கு (O-) ஓ நெக்கற்றிவ் இரத்தம் தேவைப்படுகிறது.

திருமலையில் 6 ஆம் கட்டையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலால் படுகாயமுற்றுப் படுத்த படுக்கையாக இருக்கும் திருமதி செந்தில்மணி சுப்பிரமணியம் (வயது32) என்பவருக்கு ஓநெக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளியுறவு அமைச்சிடம் பேர்னாட் திலகரத்தினா உறுதி

(புதுடில்லி)

இலங்கையில் ஸ்ரீலங்கா அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் யுத்தத்தில் மூன்றாவது நாட்டின் உதவி எதையும் ஸ்ரீலங்கா அரசு கோர மாட்டாது என்று ஸ்ரீலங்கா அரசின் வெளியுறவுச் செயலர் பேர்னாட் திலகரத்தினா நேற்றுப் புதுடில்லியில் இந்திய வெளியுறவுச் செயலர் துபேயையும், வெளிவிவகார அமைச்சர் ஐ. கே. குஜ்ராலையும் சந்தித்துப் பேசியபோது உறுதியளித்தார்.

பாகிஸ்தானின் உதவியை ஸ்ரீலங்கா நாடப்போவதாக இந்திராகாங்கிரஸ்தலைவரும் இந்திய எதிர்க்கட்சித் தலைவருமான ராஜீவ்காந்தி தெரிவித்திருந்ததுபற்றி விளக்கம் கேட்டபோதே பேர்னாட் திலகரத்தினா மேற்கண்டவாறு உறுதியளித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் நடைபெறும் சம்பவங்கள் பற்றி "உண்மை நிலை" பற்றி இந்திய அரசிடம் எடுத்துக் கூறுவதற்காக சிறிலங்கா அரசின் சார்பில் ஜனாதிபதி பிரேமதாசாவினால் விசேஷ தூதவராக அனுப்பப்பட்ட பேர்னாட் திலகரத்தினா இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ராலிடம் இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் பீரிஸின் கடிதமொன்றையும் கையளித்தார்.

இலங்கைத் தமிழ் மக்களின் பாதுகாப்பு, பந்தோபஸ்து பற்றி இந்தியா கரிசனையுடனிருப்பதாக இந்திய வெளியுறவுச் செயலாளரும் வெளிவிவகார அமைச்சரும் திலகரத்தினாவிடம் கூறியதாகவும் இலங்கையில் நடக்கும் சம்பவங்கள் பற்றித் தங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கூறியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### தமிழ் நாடு தலையிடலாம்

இலங்கைத் தமிழர் விஷயத்தில் தமிழ்நாடு தலையி

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு வைத்தகுறி இராணுவத்தையே சூழ்ந்தது!

(மாங்குளம்)

மாங்குளம் இராணுவ முகாமிற்குநேற்றுமுன்தினம் ஹெலிகப்டர்களில் இருந்து போடப்பட்ட உணவுப் பொதிகள் முகாமிற்கு வெளியில் வீழ்ந்ததைத் தொடர்ந்து அதனை எடுக்கவந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடும் சண்டை மூண்டது.

இதனால் பின்வாங்கிய இராணுவத்தினர் முகாமிற்குள் சென்று மோட்டோர் தாக்குதலை மேற்கொண்டனர். அப்பொழுது மோட்டர் தற்செயலாக முகாமிற்குள் வெடித்ததினால் சில இராணுவ வீரர் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது. இதனைத் தொடர்ந்து ஹெலியில் இருந்துவிடுதலைப் புலிகளின் நிலைகளின் மீது றொக்கட் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டது அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட றொக்கட் சிலவும் முகாமிற்குள் வீழ்ந்து வெடித்தது. இந்த றொக்கட் தாக்குதலாலும் சில இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றும்முதல்நாள்போட்ட உணவுப் பொருட்களை இராணுவத்தினர் எடுக்கவந்த போது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிகின்றது. இதனால் இராணுவத்தினர் மீண்டும் பதுங்குகுழியினுள்சென்றனர். அப்பொழுது மீண்டும் பதுங்குகுழியினுள் குண்டொன்று வெடித்ததால் பதுங்குகுழி அரண் முற்றாக இடிந்து வீழ்ந்ததாகத் தெரிகின்றது.

## நல்லூர் வீதியில் சந்திக்க அரச அதிபர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றும் (ஆசிரியர் நீங்கலாக) சகல அரசாங்க உத்தியோகத்தர்களையும், வங்கி அதிகாரிகளையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் தவறாது சமுகம் அளிக்கும் வண்ணம் வவுனியா மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் பணித்துள்ளார். மேற்படி சந்திப்பில் தற்போதைய நிலை பற்றிக் கலந்தாலோசிக்கப்படவுள்ளது.

## 19 இராணுவத்தினர் கால்கள் இழப்பு!

(மன்னார்)

முள்ளிக்குளத்தில் நேற்று முன்தினம் முன்னேற முயன்ற இராணுவம் விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்டிருந்த மிதிவெடிகளில் சிக்கி பத்தொன்பது பேர் கால்களை இழந்துள்ளனர். இச் சம்பவத்தில் அதிகாரி ஒருவர் உட்பட இருபத்தியேழுபேர் காயமடைந்ததாக இலங்கை வானொலி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

புங்குடுதீவில் உள்ள ஒரு சில வியாபாரிகள் கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்வதாக பொது மக்கள் குறை கூறுகிறார்கள்.

அத்தியாவசிய பொருட்கள் பால்மா வகைகள் என்பனவே இவ்வாறு கூடுதலானவிலைக்கு விற்கப்படுவதாக கூறப்படுகிறது.

சில வியாபாரிகளே பதுக்கல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (22)

## இடம்மாற்றம்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழைப் பகுதியில் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும்ஹெலி, பொம்மர் தாக்குதல்களாலும், ஷெல் தாக்குதல்களாலும் ஏற்கனவே தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், தெல்லிப்பழை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கஅலுவலகம்என்பனஇடம் மாற்றம் செய்யப்பட்டதனை

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு திருத்தம்

தமிழர் போருக்கு கடனாக உதவுக என்னும் நேற்று வந்த தலைப்புச் செய்தியில் கடன் மீளளிபபு விபரத்தில் இரண்டாவது பந்தியில் 100 கடன்பத்திரக்காரருக்கு என்பது 100 ரூபா கடன்பத்திரக்காரருக்கு என தவறுதலாக வந்துள்ளது. இதைத் திருத்திக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறோம்.

ஆ-ர்.

தேசிய ஒருமைப்பாடு!

## தமிழர்களுக்கு உணவில்லை!

(கொழும்பு)

மட்டக்களப்பு பகுதிக்கு என எட்டு லொறிகளில் உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கொ

(4ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளத்தில் புலிகள் - இராணுவம் கடும் மோதல்; பல படையினர் பலி!

(வவுனியா)

வவுனியாவில் கடந்த இருபத்தியெட்டாம் திகதி தாண்டிக்குளம் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையில் கடும் சண்டை மூண்டது.

தாண்டிக்குளம் பகுதியில் விடுதலைப்புலிகளின் காவல் அரண்களை வவுனியா நகரில் இருந்த இராணுவம் முற்றுகையிட முற்படடபோதே இக் கடும் சண்டை மூண்டது.

இருபத்தியேழாம் திகதி இரவு மன்னார், யாழ்ப்பாணம் வீதிகள் வழியாக வந்த இராணுவத்தினர் விடுதலைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு வாரத்தில் யாழ் நகர் மீது 3வது தடவை விமானத் தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டைக்குள் இருக்கும் சிறிலங்கா இராணுவத்துக்கு உணவும், மருந்தும் கொடுப்பதற்கு முயற்சி செய்வதாகக் கூறிக் கொண்டு சிறிலங்கா விமானப் படை விமானங்கள் யாழ் நகரில் குடிமக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் நேற்றுக் காலையிலும், பிற்பகலிலும் குண்டு வீசித் தாக்கின. கோட்டையிலிருந்து ஒ றரை மைல் தூரத்திலுள்ள இந்துக் கல்லூரிக்குச் சமீபமாக வீசப்பட்டுள்ள குண்டுகள் மூன்று வீடுகளைச் சேதப்படுத்தின. நகரிலும் பல கட்டிடங்கள் சேதமடைந்தன.

மக்கள் தமது இடங்களை விட்டு வெளியேறியிருந்ததாலும் மற்றும் பலர் பதுங்கு குழிக்குள் புகலிடம் தேடியிருந்ததாலும் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. கடந்த எட்டுத் தினங்களுக்குள் விமா

(4ஆம் பக்கம் பார்க்க)

# A/L இரசாயனம்

## பரீட்சை மாதிரி வினாக்களும் விடைகளும்

## பொது இரசாயனம் - அசேதன இரசாயனம்

அமைப்பு வடிவ வினாக்கள்

## தொடர் - 6

## சத்தீஸ்

### பரீட்சை மாதிரி வினாத்தாள் 3 இன் விடைகள் (தொடர்ச்சி)

விடை 2

a) $NH_4^+ + OH^- \rightarrow NH_3 + H_2O$
2 g S இல் உள்ள

(i) $n_{NH_4^+} = n_{NH_3} = \frac{1}{25} \times 0{\cdot}25 = 0{\cdot}01$ mol

(ii) $W_{NH_4^+} = 0{\cdot}01 \times 18 = 0{\cdot}18$g.

b) (i) $SO_4^{--} + BaCl_2 \rightarrow BaSO_4 \downarrow + Ba^{++}$
∴ 2 g S இல் உள்ள

$$n_{SO_4^{--}} = n_{BaSO_4} = \frac{2{\cdot}33}{(137 + 32 + 64)} = 0{\cdot}01 \text{ mol}$$

(ii) $W_{SO_4^{--}} = 0{\cdot}01 \times 96 = 0{\cdot}96$ g

c) 25 $cm^3$ கரைசலில் உள்ள S இன் திணிவு $\frac{10}{250} \times 25 = 1$ g ஆகும்.
∴ 2 g S இல் உள்ள

(ii) $n_{Cu^{++}}\ n_{S_2O_3^{--}} = \frac{0{\cdot}1}{1000} \times 25 \times 2 = 0{\cdot}005$ mol.
$W_{Cu^{++}} = 0{\cdot}005 \times 64 = 0{\cdot}32$ g.

d) (i) 2 g S இல் உள்ள
$W_{H_2O} = 2 - (W_{NH_4^+} + W_{SO_4^{--}} + W)Cu^{++}$
$W_{H_2O} = 2 - (0{\cdot}18 + 0{\cdot}96 + 0{\cdot}32)$
$= 0{\cdot}54$ g

(ii) $n_{H_2O} = \frac{0{\cdot}54}{18} = 0{\cdot}03$ mol

e) (i) 2 g S இல் உள்ள அயன்களின் mol விகிதம்

| | $NH_4^+$ | $SO_4^{--}$ | $Cu^{++}$ | $H_2O$ |
|---|---|---|---|---|
| mol | 0·01 | 0·01 | 0.005 | 0 03 |
| mol விகிதம் | $\frac{0{\cdot}01}{0{\cdot}005}$ | $\frac{0\ 01}{0\ 005}$ | $\frac{0\ 005}{0{\cdot}005}$ | $\frac{0{\cdot}03}{0\ 005}$ |
| | 2 | 2 | 1 | 6 |

∴ S இன் சூத்திரம் : $(NH_4)_2\ Cu\ (SO_4)_2 \cdot 6H_2O$
அதாவது : $(NH_4)_2\ SO_4 \cdot CuSO_4 \cdot 6H_2O$

(ii) $Cu^{++}$ : நீர்க்கரைசலுக்கு $NH_3(aq)$ ] சேர்க்கும் போது நீல நிற வீழ்படிவு

# கூட்டுறவுச் சங்கக் கிளையில் மூன்றாவது தடவை கொள்ளை

(புங்குடுதீவு)
கடந்த இருபத்தேழாம் திகதி இரவு புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒன்பதாம் கிளை உடைக்கப்பட்டுச் சுமார் ஐயாயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப்பொருட்கள், பால்மா வகைகள் உட்பட பல பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

மேற்படி கிளை இதற்குமுன் கடந்த பதினாறாம் திகதி இரவும் உடைக்கப்பட்டுக் கொள்ளையிடப்பட்டது. அதுமட்டுமல்லாமல் கடந்த இரண்டு மாதங்களுக்குள் இக்கிளையில் நடாத்தப்பட்ட கொள்ளைச் சம்பவம் இதுவாகும்.

தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி இக்கிளை மீது அடிக்கடி கொள்ளை நடாத்தப்பட்டு வந்ததால் இரண்டாம் வட்டாரத்தில் அமைந்துள்ள மேற்படி கிளையைப் பாதுகாப்பான இடத்திற்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. (22)

# துணுக்காய் அகதிகளுக்கு உதவி எதுவும் இல்லை

(யாழ்ப்பாணம்)
திருமலை, மாங்குளம், வவுனியா, பாவற்குளம், செட்டிகுளம் ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த பெருந்தொகையான மக்கள் வவுனிக்குளம், துணுக்காய் ஆகிய பகுதிகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

இவ்வாறு அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள இம் மக்கள் உணவு, உடை மற்றும் எரிபொருள் எதுவுமின்றிப் பெரிதும் கஷ்டமடைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதேவேளை இம் மக்களின் நிவாரணங்கள்குறித்து கிராம சேவகர்கள் மட்டத்திலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கபடவில்லை என்று கூறப்படுகின்றது.

## கலைப்பீட மாணவருக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
தற்போதைய நெருக்கடி நிலைமைகளால்தமதுசொந்த வசிப்பிடங்களுக்குச் செல்ல முடியாத கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் தத்தமது பெயர்களை உடனடியாக யாழ் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தில் பதியுமாறு வேண்டப்படுகின்றனர்.

# க. பொ. த பரீட்சையில் உடற்பயிற்சிக் கல்வி

(கொழும்பு)
க. பொ. த சாதாரண, உயர்தர பரீட்சைகளில் இனிமேல் உடற்பயிற்சிக் கல்வி ஒரு பாடமாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது.

பட்டப்படிப்புகளிலும் இதனை ஒருபாடமாக சேர்த்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

# அத்தியாவசிய பொருட்களுக்கு கிளிநொச்சியில் தட்டுப்பாடு

(கிளிநொச்சி)
கிளிநொச்சியில் உணவுப் பொருட்கள், எரிபொருள், மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலை தொடருமானால் மக்கள் பட்டினிச் சாவுக்கு உள்ளாவார்கள்.

கிளிநொச்சி நகரிலுள்ள கடைகள் அனைத்தும் மூடப்பட்டுக்கிராமங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு பொருட்கள் பதுக்கப்படுவதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

பதுக்கள் பொருட்கள் கள்ளச் சந்தையில் கூடுதல் விலைக்கு விற்கப்படுகின்றன. (49)


வரிவிளம்பரம்

## காணவில்லை

து. அண்ணுத்தாய். பிறிஸ்கா ஆகிய இருவரையும் 28-6-90 அன்றிலிருந்து காணவில்லை. கண்டவர்கள் தயவு செய்து கீழுள்ள விலாசத்திற்கு அறியத்தரவும். S. புலேந்திரன், 15/6 நியூ கொலனி, திருநெல்வேலி, கோப்பாய். தகவல்:- ராஜா ஸ்ரோர்ஸ், வவுனியா. (R/392)


## படுகாயம்

(கிளிநொச்சி)
பன்றிக்கு வைத்த வெடி தவறுதலாக வெடித்ததனால், வெடி வைத்தவர் படுகாயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

முருகண்டி154 ஆம் கட்டையடியில் வசிக்கும் கந்தையா சுப்பிரமணியம் (35 வயது) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார். (49)

## அரசாங்க அறிவித்தல்

ஊர்காவற்துறை சுகாதாரப் பணிமனையைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் அனைவரும் எதிர்வரும் புதன்கிழமை (4-7-90) காலை 8.00 மணிக்கு தற்போது இயங்கும் யாழ்ப்பாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைக்குதவறாது சமுகம் அளிக்கவும்.

தற்போதைய பணிமனை விலாசம்
திரு. சி. ஞானசுந்தரம்
முத்தடிமடம் ஒழுங்கை
கே. கே. எஸ். வீதி
கோண்டாவில்.

சுகாதார வைத்திய அதிகாரி
ஊர்காவற்றுறை
(B/ 1216)


## மருந்துக்கடை இடமாற்றம்

இப்போதய சூழ்நிலையில்
பாதுகாப்புக் கருதி
எமது ஸ்தாபனம்
கீழ்க்காணும் முகவரிக்கு
மாற்றப்பட்டுள்ளது

எங்களிடம்
அபிஷேகச் சாமான்கள் ❋ ஆயுள்வேத மருந்துகள்
❋ மருந்துச் சரக்குகள் ❋ வாசனைத் திரவியங்கள்
சகல சாமான்களையும் உங்கள் திருப்திக்கேற்ற வகையில் பெற்றுக்கொள்ளலாம்.

புதிய விலாசம்:

க. செ. கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்

மருந்துச் சரக்கு வியாபாரம்
4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில்)
(B/1201)

$$W_{H_2O} = 2 - (0{\cdot}18 + 0{\cdot}96 + 0{\cdot}32)$$
$$= 0{\cdot}54\ g$$

(ii) $n_{H_2O} = \frac{0{\cdot}54}{18} = 0{\cdot}03\ mol$

e) (i) 2 g S இல் உள்ள அயன்களின் mol விகிதம்

| | $NH_4^+$ | $SO_4^{--}$ | $Cu^{++}$ | $H_2O$ |
|---|---|---|---|---|
| mol | 0·01 | 0·01 | 0.005 | 0 03 |
| mol விகிதம் | $\frac{0{\cdot}01}{0{\cdot}005}$ | $\frac{0{\cdot}01}{0\ 005}$ | $\frac{0\ 005}{0{\cdot}005}$ | $\frac{0{\cdot}03}{0\ 005}$ |
| | 2 | 2 | 1 | 6 |

∴ S இன் சூத்திரம் : $(NH_4)_2\,Cu\,(SO_4)_2 \cdot 6H_2O$

அதாவது : $(NH_4)_2\,SO_4 \cdot CuSO_4 \cdot 6H_2O$

(ii) $Cu^{++}$ : நீர்க்கரைசலுக்கு $NH_3(aq)$ சேர்க்கும் போது நீல நிற வீழ்படிவு தோன்றி மிகையில் கரைந்து கருநீலநிறக் கரைசலைக் கொடுக்கும்.

$NH_4^+$ : நீர்க்கரைசலுக்கு நெசிலரின் சோதனைப்பொருள் சேர்க்கும் போது கபிலம் அல்லது மஞ்சள் நிற வீழ்படிவு தோன்றும்.

(iii) $CuSO_4 \xrightarrow{\Delta H} CuO + SO_3$

$$(NH_4)_2\,SO_4 \xrightarrow{\Delta H} 2NH_3 + SO_3 + H_2O$$

$$3CuO + 2NH_3 \xrightarrow{\Delta H} 3Cu + N_2 + 3H_2O$$

(தொடரும்)

விமானக் குண்டு வீச்சால்

# வீடுகளில் இருந்து மக்கள் வெளியேற்றம் வீடுகள், களஞ்சியங்கள் சேதம்

## ரான்ஸ்போமர் வெடித்ததால் மின்சாரம் துண்டிப்பு

(கிளிநொச்சி)

தர்மபுரம் பகுதியில் கடந்த வெள்ளியன்று இடம் பெற்ற விமானக் குண்டு வீச்சு நடவடிக்கைகளைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி அயல் கிராமங்களில் தங்கியுள்ளனர்.

அன்றைய தினம் புளியம்பொக்கணையில் விமானத்திலிருந்து பீப்பாக் குண்டு வீசப்பட்டதால் நெற்சந்தைப்படுத்தும் சங்கக் கட்டிடம் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளதுடன், பரந்தனில் வீசப்பட்ட வேறு இரண்டு பீப்பாக் குண்டுகளால் அங்கிருந்த நெற் களஞ்சியமொன்றும் பலத்த சேதத்திற்குள்ளாகியது.

இதே வேளை கனகபுரம் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் விழுந்த குண்டு ஒன்றினால் அங்கிருந்த ரான்ஸ்போமர் வெடித்துச் சிதறி விட்டதுடன்; திருநெறிக் கழகக்கட்டிடம் ஒன்றும் பாரிய சேதத்திற்குள்ளாகியுள்ளது.

ரான்ஸ் போமர் வெடித்துச் சிதறியதைத் தொடர்ந்து கனகபுரம், கோணாவில் ஸ்கந்தபுரம், அக்கராயன் குளம் ஆகிய பகுதிகளுக்கான மின்சாரம் முற்றாகத் தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தீவுப்பகுதி படகுச்சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

(புங்குடுதீவு)

குறிகாட்டுவான் நெடுந்தீவு படகு சேவை தற்போது வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே நடாத்தப்படுகின்றது.

திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில்மேற்கொள்ளப்பட்டுவரும் இச்சேவை சில வேளைகளில் தடைப் படுவதும் உண்டு.

இதனால் பல்வேறு பகுதிகளில்இருந்தும் இடம்பெயர்ந்து நெடுந்தீவிற்குச் செல்ல வரும் பிரயாணிகள் இரண்டு மூன்று நாட்களாக புங்குடுதீவில்தங்கி நிற்க வேண்டியுள்ளது.

அவ்வாறு தங்கியுள்ளவர்களுக்கு சர்வோதயம், பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் என்பன பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. (22)

# பட்டப் பகலில் வீட்டில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கச்சேரி வீதியில் உள்ள வீடொன்றில் வீட்டார் ஆலயத்திற்குச் சென்றிருந்த சமயம் அங்கிருந்த 21 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தர பரீட்சைகளில் இனிமேல் உடற்பயிற்சிக் கல்வி ஒரு பாடமாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது.

கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

# அத்தியாவசிய பொருட்களுக்கு கிளிநொச்சியில் தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உணவுப் பொருட்கள், எரிபொருள், மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலை தொடருமானால் மக்கள் பட்டினிச் சாவுக்கு உள்ளாவார்கள்.

கிளிநொச்சி நகரிலுள்ள கடைகள் அனைத்தும் மூடப்பட்டுக்கிராமங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு பொருட்கள் பதுக்கப்படுவதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

பதுக்கள் பொருட்கள் கள்ளச் சந்தையில் கூடுதல் விலைக்கு விற்கப்படுகின்றன. (49)

# கிளிநொச்சிக்கு உதவ அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி அகதிகளுக்கு உதவ யாழ். மாவட்டத்திலிருந்து அரசாங்க சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களின் சேவையை கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் கோரியுள்ளார்.

கிளிநொச்சியில் 2500 குடும்பங்களைச் சேர்ந்த பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் அகதி முகாம்களில் தங்கியுள்ளனர் என்று அரச அதிபர் தெரிவித்தார். கிளிநொச்சி ஆஸ்பத்திரி இராணுவ நடவடிக்கையால் இயங்க முடியாதிருப்பதால் அங்கு பணியாற்றும் ஊழியர்கள் நவஜீவனத்தில் வைத்தே அப்பகுதி நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கிறார்கள். இருந்தும் அங்கு வைத்தியர் பற்றாக்குறையும் மருந்து தட்டுப்பாடும் நிலவுகிறதாம். (75)


அம்பாள் துணை

சாவகச்சேரி தென்மட்டுவிலூர்
அருள்மிகு ஸ்ரீகுறுமுனி (மனோன்மணி)
அம்பாள் மஹா சங்காபிஷேக

## விஞ்ஞாபனம்

மேற்படி அருள்மிகு ஸ்ரீ குறுமுனி அம்பாளுக்கும் ஸ்ரீ வைரவப் பெருமானுக்கும் மஹா சங்காபிஷேக விழா பகல் 11 மணியளவில் பிரதமகுரு ஸ்ரீ சக்திதாசன் கிரியா கலாமணி சிவஸ்ரீ ச. சோமாஸ்கந்த குருக்கள் தலைமையில் சிவஸ்ரீ ச. நடேசகுருக்கள், சிவ ஸ்ரீ ஐ ஞானக்குருக்கள், பிரம்மஸ்ரீ ந. விமலதாசசர்மா ஆகியோர் அமைந்த குழுவினால் பிரபல நாதஸ்வர வித்துவான் N. T. சத்தியநாதன் குழுவினரின் மங்கள இசையுடன் சங்காபிஷேக விழா இனிது நடைபெறும். தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானமும் நடைபெறும். சிவசக்தியின் ஓர் அவதாரமாம் ஸ்ரீ குறுமுனி அம்பாளின் அருட்சக்தி நாடெங்கும் பரவவும் நாட்டு மக்கள் சிந்தையிலே அமைதி ஒளி பிறக்கவும் நல்லபடி வாழ்வாங்கு மண்ணில் வாழவும் அம்பாளின் அருள் பொங்க வேண்டும் எனவிரும்பும் P. S. பத்மநாதன், S. P. பத்மசீலன், செல்வி புஸ்பலதா பத்மநாதன், ஆலய நிர்வாகிகள் பிரார்த்திக்கிறார்கள்.

S. P. பத்மசீலன்

ஸ்ரீ குறுமுனி அம்பாள் ஆலயம்
தென்மட்டுவிலூர்.

3-7-90 (R/ 393)



மாற்றப்பட்டுள்ளது

எங்களிடம்
அபிஷேகச் சாமான்கள் ❋ ஆயுள்வேத மருந்துகள்
❋ மருந்துச் சரக்குகள் ❋ வாசனைத் திரவியங்கள்
சகல சாமான்களையும் உங்கள் திருப்திக்கேற்ற வகையில் பெற்றுக்கொள்ளலாம்.

புதிய விலாசம்:

## க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

மருந்துச் சரக்கு வியாபாரம்
4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில்)

(B/1201)



மூன்றாவது ஆண்டு

## நினைவாஞ்சலி

மலர்வு 26 - 09 - 1927



உதிர்வு 07 - 07 - 1987

ஷெல் தாக்குதலால் இன்னுயிர் நீத்த
வீணை வித்தகி, சங்கீதபூஷணம்

திருமதி
## சுந்தரேஸ்வரி முத்துத்தம்பி

அம்மையாரின்

ஆத்மசாந்திக் கிரியைகளும், நினைவு மலர் வெளியீடும் ஆடி மாதம் 03. 07. 1990 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9-45 மணி தொடக்கம் மதியபோசனம் வரை ''கலைச்சோலை''யில் நடைபெறும்.

அவற்றில் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''கலைச்சோலை''
அரசடிச் சந்தி,
கொடிகாமம் வீதி,
கரவெட்டி.

இ. முத்துத்தம்பி
(முன்னைநாள் விரிவுரையாளர்)
Dr. சிறீதரன், Dr. சிறீஜயந்தா,
இராதிக்கா, வசந்திக்கா.

(B-1213)

சிந்தனைக்கு

அபாயம் எதுவுமின்றி மகத்தானது எதுவும் எப்பொழுதும் சாதிக்கப்பட்டதில்லை.

- நிக்கொலோ மேக்கிய வெல்லி

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 03-07-90

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

த. பெ. எண் 05

# தானாகவே கனியும் சுதந்திரம்!

தெற்கிலிருந்து மீண்டும் வடக்கு நோக்கி அகதிகள் வந்துகொண்டிருக்கிறார்கள். இதில் ஒரு வித்தியாசம் முன்பு கப்பலில் அகதிகள் அனுப்பப்பட்டனர். இப்பொழுது அகதிகள் என்ற பெயர் வெளியே தெரியாமல் லொறிகளிலும் பஸ்களிலும் அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

1958ஆம்ஆண்டு மே மாத இறுதியில் வகுப்புக்கலவரம் வெடித்து நாடு முழுவதும் பரவி உயிர், உடைமைகளை இழந்த தமிழ் மக்கள் கொழும்பிலும் மற்றும் இடங்களிலும் அகதிமுகாம்களில் தஞ்சம் புகுந்திருந்தனர்.

முதலில் அகதிமுகாம்களே தேவையில்லை என்று கருதிய அன்றைய பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டீ பண்டாரநாயக்கா ''தமிழ் மக்கள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டுக்கொண்டிருந்த சமயத்தில் ''நிலைமை கட்டுப்பாட்டுக்குள்ளிருக்கிறது'' என்று அறிக்கை விட்டுக்கொண்டிருந்தார்.

ஆனாலும் அகதிகள் தொகை அதிகரிக்க அதிகரிக்க அகதிமுகாம் ஏற்பாடு செய்து அகதிகளுக்கு உணவு மருத்துவ வசதிகள் செய்யவேண்டியேற்பட்டது. பின்னர் அவர்களைக் கப்பல்களில் ஏற்றி வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்க நேரிட்டது.

கப்பலில் ஏறிய தமிழர்கள் இனிமேல் தென்பகுதியை நினைக்கமாட்டோம்; ''தமிழ் அரசை அமைப்போம்'' என்று சொல்லிக்கொண்டார்கள்.

1958 ஆம் ஆண்டுக்குப் பின் 1977 ஆம் ஆண்டிலும் 1983 ஆம் ஆண்டிலும் தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் மிக மோசமாகத் தாக்கப்பட்டு அவர்கள் தேடிய சொத்துக்கள் எல்லாம் அழிக்கப்பட்டபின் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தாயக மண்ணுக்கு வந்தார்கள்.

ஆனாலும் அவர்கள் அனைவரும் இங்கு நிரந்தரமாகத் தங்கிவிடவில்லை. வெளிநாடுகளில் சென்று குடியேற வசதியுள்ளவர்கள் வெளிநாடுகளில் போய்க் குடியேறினர்; மற்றும் பலர் தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தனர்.

இங்குள்ள தமிழர்களை சிங்கள பௌத்த பேரினவாதம் அழிப்பதற்குக் கங்கணம் கட்டியது. இன்றும் அதே நோக்கத்துடன் சிங்கள பௌத்த பேரினவாதிகள் செயல்படுகிறார்கள்.

# நெருக்கடி நிலைகளில் உணவு உற்பத்தி

இன்று ஈழத்தமிழர் தாயகம் எங்கணும் யுத்த மேகங்களால் சூழப்பட்டுக் கிடக்கிறது. நெல் உற்பத்தியில் தமிழ்ப் பிரதேசங்களில் முன்னணியில்திகழும் திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கிளிநொச்சிப் பகுதிகளில் வசித்தமக்கள் அகதிகளாக வெளியேறி விட்டனர். யாழ். மாவட்டத்திலுள்ள சில வினைத்திறனான விவசாயக்கிராமங்களிலிருந்தும் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர் இதனால் நெல் உற்பத்தியும் உபஉணவுப்பயிர்களின் உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்படுவது நிட்சயமாகிவிட்டது. அதேவேளயில் இப்பிரதேச மக்களால் அன்றாடம் பயன்படுத்தப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி, மா போன்றவற்றை பெறுவதில் பல்வேறு சிரமங்கள்எதிர்நோக்கப்படுகின்றது. வடக்கு கிழக்கு மக்கள் மீது பொருளாதாரத் தடையா? என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் வலுத்துள்ளது.

இந்நிலையில் எமது பிரதேசங்களில் உணவு உற்பத்தியினை மேற் கொள்ளும் விவசாயிகள் தொடர்ந்தும் வழமையான பயிர்களை பயிரிடின் பலபிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.பெரும்முதலிட்டுசெய்கை பண்ணப்படும் பயிர் வகைகளைக் கொழும்புச் சந்தையிலோ பிறமாவட்டங்களிலோ சந்தைப்படுத்த முடியாத நிலை எழுந்துள்ளது. அதே வேளையில் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படும் எரி பொருளிற்கும் கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இவை எல்லாவற்றிக்கும் மேலாக தோன்றியுள்ள நிலமைகளினால் நிட்சயமற்ற தன்மையும் காணப்படுகின்றது. இதனால் வழமையான உபஉணவுப் பயிர்களை விஷேடமாகப் பணப்பயிர்களைப் பயிரிடுவது புத்திசாலித்தனமானதுமல்ல.

அதேவேளையில் இன்று நம் பிரதேசங்களில் எழுந்துள்ள நெருக்கடியான நிலையில் இப் பிரதேச விவசாயிகளிற்குச் சிலதார்மீகப் பொறுப்புக்களும் உண்டு. அதாவது எமது பிரதேசங்களில்உருவாகியுள்ள நிலைமைகளைக் கருத்திற் கொண்டு உணவு உற்பத்தியானதுதிட்டமிடப்பட்டுமேற் கொள்ளப்படவேண்டும்விஷேடமாக எமது பிரதேச மக்களின் நுகர்ச்சித் தேவையினை அடிப்படையாகக் கொண்ட ஒருமாற்றீட்டுப் பயிர்செய்கை முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொருவரும் நீண்ட காலத் தேவையினை கருத்திற் கொண்டு தமக்குத் தேவையான உணவுப்பொருட்களை தங்கள் வீட்டுத் தோட்டங்களிலும் தரிசு நிலங்களிலும் பயிர்செய்கை மேற் கொள்ளப்பட வேண்டும்.

## பொருத்தமான பயிர்கள்

இன்றைய நெருக்கடி நிலைக்குப் பொருத்தமான பயிர் வகைகளைத் தெரிவு செய்ய முற்படுகையில் சமகால நிலையை கருத்திற் கொண்டு பார்க்கையில் அவை-

1) மிகக் குறுகிய காலத்தில் உற்பத்தி செய்யப்படக்கூடிய பயிர்வகைகளாக இருத்தல் வேண்டும்.

2) நீண்டகாலம் சேமித்து வைக்கக்கூடிய பயிர்வகைகளாக இருத்தல் வேண்டும்.

3) இன்றைய தட்டுப்பாடு, உயர்விலை போன்றனவற்றைக் கருத்திற்கொண்டு குறைந்த தடவைகள் நீர்ப்பாசனம் செய்யக்கூடியதாக அதாவது கூடியகால இடைவெளியில் நீர்ப்பாசனம் செய்யக்கூடியதாகவும், மிகக் குறைந்த செலவில் பசளைப் பிரயோகம், பயிர்பாதுகாப்பு என்பனவற்றுடன் உற்பத்தி செய்யப்படக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

**புருசோத்தமன்**

4) அரிசி, மா போன்றவற்றால் செய்யப்படும் உணவுப் பதார்த்தங்களிற்கும் பிரதியீடாகப் பயன்படுத்தக்கூடிய உற்பத்திகளைத் தரக்கூடிய பயிர்வகைகளாக இருத்தல் வேண்டும்.

இன்னோரன்ன காரணிகளைக்கருத்திற் கொண்டு பயிரிடக்கூடிய பயிர் வகைகளில் பயறு, கௌபீ போன்ற பருப்பு வகைகளையும், குரக்கன், சாமை, தினை போன்ற தானியப் பயிர்வகைகளையும் மரவள்ளி போன்ற கிழங்குவகைகளையும் பயிரிடலாம்.

## சேமிப்பு

இன்றைய காலகட்டத்தில் உற்பத்தியுடன் சேமிப்பும் முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் உற்பத்தி செய்யப்படும் பயிர்வகைகளை நீண்டகாலம் சேமித்து வைத்தே பயன்படுத்தவேண்டியுள்ளது. பண்டையமரபு வழி வந்த விவசாயக்குடும்பங்களிடையே உற்பத்தி செய்யப்பட்டு அறுவடை செய்யப்படுகின்ற விளைபொருட்களில் ஒரு பகுதியைச் சேமிப்பது ஒரு பாரம்பரியமாக இருந்துவருகிறது. ஆனால் நமது பிரதேசங்களில் உள்ள விவசாயிகளில் பெரும்பாலானோர் இதனைக் கடைப் பிடிப்பதில்லை. ஆனால் மரபு வழி வந்த விவசாயக் குடும்பங்களிடையே இன்றும் இந்தப் பாரம்பரியம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்தப் பாரம்பரியம் இன்றைய சூழலில் ஒவ்வொருவராலும் கண்டிப்பாகப் பின்பற்றப்படவேண்டும்.

## சேமிப்பு முறைகள்

மேற்கூறப்பட்ட பயிர்வகைகளில் மரவள்ளிக்கிழங்கை தேவைக்கு ஏற்ப உடன் பிடுங்கிப் பாவிக்கலாம். ஏனையவற்றை சேமிக்க முடியும். சேமிப்பில் வண்டுகளின் தாக்கம் இல்லாது பாதுகாப்பதே முதன்மையானது. உதாரணமாக பயறு, கௌபீ என்பனவற்றை பயற்றை வண்டு தாக்குவதால் அவற்றின் விதைப் பரப்பில் துவாரங்கள் தோன்றுகின்றன. அத்துடன் சுமார் 12 வீதம் ஆன புரதச் சத்தும் இழக்கப்படுகிறது.

எனவே இவ் உணவுப் பொருட்களைப் பாதுகாப்பாய்ச் சேமிக்க மரபு வழி வந்த விவசாயக் குடும்பங்கள் உள்ளூரில் காணப்படும் சில பொருட்களைக் கொண்டு பாதுகாக்கின்றன. அதில் ஒரு முறையை நோக்குவோம். இவற்றை சேமிக்க மண் பானைகள் அல்லது பனை ஓலையால் செய்யப்பட்ட கூடைகளைப் பயன்படுத்தலாம். இவற்றினுள் சிறிய, சிறிய படைகளாக உணவுப் பொருட்களை இடவேண்டும், இவற்றிற்கிடையே மணல் அல்லது சாம்பலை மென் படைகளாக இட வேண்டும். இவ்வாறு நிரப்பியபின் மேலே இரண்டங்குலத்திற்கு மணல் அல்லது சாம்பலினால் நிரப்ப வேண்டும். இவ்வாறு வைத்திருப்பதன் மூலம் ஏறத்தாழ ஒரு வருடத்திற்கு மேல் உணவுப் பொருட்களை பழுதடையாமல் சேமிக்க முடிகின்றது. பின்னர் தேவையான காலங்களில் அரிதட்டினால் அரித்தெடுத்துப் பாவிக்கலாம்.

## நிறைவாக ..

உணவுத் தட்டுப்பாடு போன்றவற்றை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்ற வேளையில். நீண்ட யுத்தகால சூழல்களின் கோலங்கள் தெரிகின்ற வேளையில் நாம் யாவரும் மேற்கூறிய அம்சங்களை அனுசரித்து பருப்பு, தானிய, கிழங்கு வகைகளைப் பயிரிட்டும் சிறந்த முறையில் சேமித்தும் நம்மை நாமே காக்கத் தயாராவோம்.

# ஸாம்பியாவில் இராணுவ தளபதி பதவியில் இருந்து நீக்கம்

(லுசாக்கா)

ஸாம்பியாவில் இடம்பெற்ற சதிப்புரட்சி முயற்சியைத் தொடர்ந்து ஸாம்பியாவின் இராணுவத் தளபதியான லெப். ஜெனரல்காரிகாலங்கே பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ஸாம்பிய ஜனாதிபதி கெனத் கௌண்டா சதிப் புரட்சி குறித்து இராணுவ பாதுகாப்பு அதிகாரிகள் கொண்ட உயர் மட்ட மாநாட்டை நடாத்திய பின்னர் இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

இந்த தளபதிக்கு அடுத்த பதவியில் உள்ள மேஜர் ஜெனரல் பிரான்ஸிஸ் டிபாண்டா புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோல பாதுகாப்பு அமைச்சராகவும் புதியவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த முப்பதாம் திகதி இராணுவத்தில் ஒரு சிறுபிரிவு இங்குள்ள அரச வானொலி நிலையத்தைக் கைப்பற்றி

# ஒரிஸா தமிழ் அகதிகளுக்கு 20 லட்சம் ரூபா செலவாகிறது

(புவனேஸ்வர்)

தேழு இலங்கைத் தமிழ் அக

வித்துள்ளது.

# ஹெலிசுட்டதில் இருவர் காயம்

(வவுனியா)

ஓமந்தையில் மீண்டும் ஹெலி தாக்குதல். இருவர் படுகாயமடைந்தனர். காரொன்று சேதமடைந்தது. கடந்த வியாழக்கிழமை (28.06 90) வானத்தில் பல முறை சுற்றிச் சுழன்ற இரு ஹெலிகொப்ரர்கள் ஓமந்தையில் சனநடமாட்டமுள்ள பிரதான வீதியில் ஷெல் தாக்குதலை மேற்கொண்டன.

இத்தாக்குதல் சம்பவத்தில் செ.வில்வராசா, சி. கறுப்பையா என்னும் இருவர் காயமடைந்தனர். கார் ஒன்று பலத்த சேதத்திற்குள்ளானது

இதே தினம் நொச்சி மோட்டைபகுதியில் வீதியில் சென்று கொண்டிருந்த உழவு

கப்பலில் ஏறிய தமிழர்கள் இனிமேல் தென்பகுதியை நினைக்கமாட்டோம்; ''தமிழ் அரசை அமைப்போம்'' என்று சொல்லிக்கொண்டார்கள்.

1958 ஆம் ஆண்டுக்குப் பின் 1977 ஆம் ஆண்டிலும் 1983 ஆம் ஆண்டிலும் தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் மிக மோசமாகத் தாக்கப்பட்டு அவர்கள் தேடிய சொத்துக்கள் எல்லாம் அழிக்கப்பட்டபின் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தாயக மண்ணுக்கு வந்தார்கள்.

ஆனாலும் அவர்கள் அனைவரும் இங்கு நிரந்தரமாகத் தங்கிவிடவில்லை. வெளிநாடுகளில் சென்று குடியேற வசதியுள்ளவர்கள் வெளிநாடுகளில் போய்க் குடியேறினர்; மற்றும் பலர் தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தனர்.

இங்குள்ள தமிழர்களை சிங்கள பௌத்த பேரினவாதம் அழிப்பதற்குக் கங்கணம் கட்டியது. இன்றும் அதே நோக்கத்துடன் சிங்கள பௌத்த பேரினவாதிகள் செயல்படுகிறார்கள்.

இதை எதிர்த்து தமிழ் இளம் வேங்கைகள் ஆயுதம் ஏந்திப்போராடிவருகின்றனர். இந்நிலையில்தான் கொழும்பிலும் மற்றும் தென்னிலங்கையிலுமுள்ள தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்படுகின்றனர். இவர்களை முகமூடிகள் காட்டிக் கொடுக்கின்றனர். இதேசமயம் மற்றும் பல தமிழ்க் குடும்பங்கள் அகதிமுகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இனக்கலவரம் என்று பெரிதாக எதுவும் வெளியில் தெரியக்கூடியதாக இல்லாமல் சிறுசிறு சம்பவங்கள் மூலம் நெருக்கடி கொடுத்துத் தமிழ் மக்கள் அங்கிருந்து தமது தாயகத்துக்குத் தப்பிவரும் நிலை ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் தமிழ் மக்களை கப்பல்மூலம் ஏற்றி அனுப்புவதை பிரேமதாசாவின் அரசு விரும்பவில்லை. இதனால் லொறிகள் மூலமும் பஸ்கள் மூலமும் அரசின் ஏற்பாடு என்ற பெயரில் இல்லாமல் தாயகத்துக்கு தமிழ்மக்கள் அனுப்பப்படுகிறார்கள்.

அகதிகளாகக் கொழும்பிலிருந்து இங்கு வந்து சேரும் மக்கள் வழியில் படும் துன்பங்கள் சொல்லுந்தரமன்று.

அடியும் உதையும் பட்டுக் கைப்பொருளும் இழந்து இங்கு வந்துசேரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

திருக்கோணமலை, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் பெருந்துன்பப்பட்டுக் காடுகளைக் கால்நடையாகவே கடந்து வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றனர்.

தென்னிலங்கையிலிருந்து வந்த தமிழர்கள் இனித் தெற்கே திரும்பிச் செல்வதில்லையென்று முடிவெடுக்க வேண்டும். காலத்துக்குக்காலம் உயிரையும் உடைமையையும் அங்கேயே இழந்துவிடுவதானால் அங்கேபோய் எதற்காக உழைக்க வேண்டும்; வாழவேண்டும்?

திருக்கோணமலைப் பகுதியிலிருந்து அகதிகளாக வந்துசேரும் மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு வலிமையுடன் செல்வதற்குத் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

வெளியிலிருந்து வரும் உண்மையான அகதிகளுக்கு இங்குள்ள மக்கள் உதவியளிக்க வேண்டுமே தவிர இங்குள்ளவர்களும் இலவச உணவுப் பொருள்களுக்காக ''போலி அகதிகளாகி'' உண்மை அகதிகளின் உணவைத் தட்டிப் பறிக்க முனையக்கூடாது.

சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கத்தினதும் சிங்களவர்களினதும் நடவடிக்கைகள் தாமாகவே தமிழருக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்துகிறது. இதைப் பயன்படுத்திக் கொள்வது தமிழ் மக்கள் கையிலிருக்கிறது.

## ஸாம்பியாவில் இராணுவ தளபதி பதவியில் இருந்து நீக்கம்

(லுசாக்கா)

ஸாம்பியாவில் இடம்பெற்ற சதிப்புரட்சி முயற்சியைத் தொடர்ந்து ஸாம்பியாவின் இராணுவத் தளபதியான லெப். ஜெனரல்காரிகாலங்கே பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ஸாம்பிய ஜனாதிபதி கெனத் கௌண்டா சதிப் புரட்சி குறித்து இராணுவ பாதுகாப்பு அதிகாரிகள் கொண்ட உயர் மட்ட மாநாட்டை நடாத்திய பின்னர் இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

இந்த தளபதிக்கு அடுத்த பதவியில் உள்ள மேஜர் ஜெனரல் பிரான்ஸிஸ் டிபாண்டா புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோல பாதுகாப்பு அமைச்சராகவும் புதியவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த முப்பதாம் திகதி இராணுவததில் ஒரு சிறுபிரிவு இங்குள்ள அரச வானொலி நிலையத்தைக் கைப்பற்றி அரசாங்கத்தைக் கைப்பற்றியதாக அறிவித்தது. அரச சார்புப் படைகள் இதனை முறியடித்தது குறிப்பிடத்தக்கது.

## ஒரிஸா தமிழ் அகதிகளுக்கு 20 லட்சம் ரூபா செலவாகிறது

(புவனேஸ்வர்)

ஒரிஸாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை பராமரிப்பதற்காக மத்திய அரசு ஒரிஸாமாநில அரசுக்கு இருபது லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது

ஆயிரத்து அறுநூற்றி பதினான்கு இலங்கைத் தமிழ் அகதிகள் தற்போது ஒரிஸாவில் தங்கியுள்ளதாக ஒரிஸா அரசு தெரிவித்துள்ளது.

இவர்களில் கோரப்பூர் பகுயில் உள்ள ஐநூற்றி எழுபத்தேழு இலங்கைத் தமிழ் அகதிகளை முகாம்களில் நிரந்தரமாக குடியமர்த்த முடியாது இருப்பதாக ஒரிஸா மாநில அரசு மத்திய அரசுக்கு தெரிவித்துள்ளது.

இதனை விட வேறு இலஙகை தமிழ் அகதிகள் இங்கு வந்து சேரவில்லை எனவும தெரிவிக்கப்படுகிறது.

## மே.ஜேர்மனி இங்கிலாந்துவெற்றி

(ரோம்)

ஞாயிறன்று நடைபெற்ற இரண்டு கால் இறுதியாட்டங்களில் மே ஜெர்மனி செக்கோஸ்லோவாக்கியாவை 1-0 என்ற கோல் வித்தியாசத்திலும், இங்கிலாந்து கமரூன் அணியை மேலதிக நேரத்தில் 3-2 என்ற கோல் வித்தியாசத்திலும் வெற்றி கண்டன.

இதைத் தொடர்ந்து இன்று அரை இறுதி ஆட்டங்கள் ஆரம்பிககின்றன. இன்றைய ஆட்டத்தில் ஆர்ஜென்டீனா இத்தாலியை எதிர்த்தாடும்

நாளைய ஆட்டத்தில் இங்கிலாந்து மே. ஜேர்மனியை எதிர்த்தாடும். இவ்விரண்டு ஆட்டங்களிலும் வெற்றி பெறும் நாடுகள் ஜூலை எட்டாம் திகதி ரோம் நகரில் நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் பங்கு கொள்வர்.

## பிலிப்பைன்ஸில் போதைவஸ்து தடுப்பு நடவடிக்கைகள்

(மனிலா)

பிலிப்பைன்ஸில் போதைவஸ்து பாவனையை தடுப்பதற்குபாடசாலைகள் தோறும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

ஜனாதிபதி திருமதி அக்கினோ இங்குள்ள பிரபல பாடசாலை ஒன்றில் வைபவ ரீதியாக இதனை ஆரம்பித்து வைத்தார்.

பாடசாலை மாணவர்களிடம் சிறு வயதிலிருந்தே போதைப்பொருளின் பாதிப்பு குறித்து பிரசாரம், கருத்தரங்கு செய்ய வேண்டும் என்றும் இதனால் எதிர்காலத்தில் இதனைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் திருமதி அக்கினோ மாணவர்களிடம் கூறினார்.

கண்டி தமிழ் அரசன்

## விக்கிரமராசசிங்கன் சமாதி முத்துமண்டபமாகியது

(சென்னை)

18 ஆம் நூற்றாண்டின் கண்டியில் ஆட்சி செய்த கடைசித்தமிழ் மன்னன் விக்கிரமராசசிங்கனின் சமாதியில் முத்துமண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தமிழகமுதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி இதனை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார்.

இந்தமுத்துமண்டபம்சுமார் ஏழரை லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளது.

இந்த முத்துமண்டபப் பகுதியை திருத்தியமைத்து உல்லாசப் பயணிகள் பிரதேசமாக மாற்றவும் தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

## காஷ்மீர் தீவிரவாதியிடம் பாகிஸ்தான் நாணயம்

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீர் பகுதியில் நான்கு காஷ்மீர் தீவிரவாதிகளை இந்திய இராணுவத்தினர் கைது செய்தனர்.

இவர்களில் ஒருவரிடம் பாகிஸ்தான் நாணயமான ஐயாயிரத்து எழுநூறு ரூபாவும் கைப்பற்றப்பட்டது.

## அகதிகள் வருகை அதிகரிப்பு

இலங்கையில் தற்போது எழுந்துள்ள நிலமைகளால் பெருமளவு தமிழ் அகதிகள் அங்கிருந்து இந்தியாவுக்கு வந்துகொண்டிருப்பதாக அகில இந்திய வானொலி அறிவித்தது.

## எரிபொருள்தடை நீக்கம்

(மாஸ்கோ)

பால்டிக் குடியரசின் லித்வேனியா தனது சுதந்திர பிரகடனத்தை நிறுத்தியுள்ளதை அறிவித்திருப்பதால் லித்வேனியா மீதான எரிபொருள் தடையை சோவியத் ரஷ்யா நீக்கியுள்ளது.

## ஹெக்டே ராஜினாமா

(புதுடில்லி)

இந்திய திட்டக்கமிஷன் தலைவர் பதவியிலிருந்து இராமகிருஷ்ண ஹெக்டே நேற்று ராஜினாமாச் செய்து கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

## இன்று

நாட்டில் அமைதி ஏற்படவும், தமிழன் வாழ்வில் சுபீட்சமானநிலைஏற்படவும் வேண்டி இன்று தென் மட்டுவிலூர் ஸ்ரீ குறுமுனி (மனோன்மணி) அம்பாளுக்கு மஹா சங்காபிசேக விழாவும் நடத்தி ஏழை மக்களுக்கு அன்னதானமும் நடத்தப்படவுள்ளது. (35)

## இருவர் காயம்

(வவுனியா)

ஓமந்தையில் மீண்டும் ஹெலி தாக்குதல். இருவர் படுகாயமடைந்தனர். காரொன்று சேதமடைந்தது.

கடந்த வியாழக்கிழமை (28.06 90) வானத்தில் பலமுறை சுற்றிச் சுழன்ற இரு ஹெலிகொப்ரர்கள் ஓமந்தையில் சனநடமாட்டமுள்ள பிரதான வீதியில் ஷெல் தாக்குதலை மேற்கொண்டன.

இத்தாக்குதல் சம்பவத்தில் செ.வில்வராசா, சி. கறுப்பையா என்னும் இருவர் காயமடைந்தனர். கார் ஒன்று பலத்த சேதத்திற்குள்ளானது

இதே தினம் நொச்சிமோட்டைபகுதியில் வீதியில் சென்று கொண்டிருந்த உழவு யந்திரத்தை நோக்கி ஹெலிகொப்ரரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இச் சம்பவத்தில் இருவர் காயமடைந்தனர்.

(தி)

வானத் தாக்குதலினால்

## அகதிகள் பாதுகாப்பான இடத்திற்கு செல்கின்றனர்

(வவுனியா)

ஓமந்தைப் பகுதியில் அடுத்தடுத்து இடம் பெற்றுவரும் வானத் தாக்குதல்களை அடுத்து அங்குள்ள அகதி முகாம்களில் தங்கியிருந்த அகதிகள் அனைவரும் பாதுகாப்புத்தேடி வேறு இடங்களுக்குச் சென்று விட்டனர்.

அண்மையில் இடம் பெற்ற ஹெலி மற்றும் பொம்மர் தாக்குதல்களினால் அகதிகளில் பலர் படுகாயமடைந்தனர். இவர்கள் நெடுங்கேணி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் அதேசமயம் மற்றைய கொந்தக்காரன்குளம், கோழியகுளம், பூவரசங்குளம் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து விட்டனர்.

வவுனியா மாவட்டத்தில் அகதிகளின் தொகை மேலும் அதிகரித்திருப்பதாக அகதிகள் புனர்வாழ்வு இணைப்பதிகாரியாகப் பொறுப்பு வகித்து வரும் திரு எஸ். நாகராசா தெரிவித்தார்.

இவர்களுக்கான நிவாரண வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(தி)

பிரதேச சுகாதார குழுவினர்

## தென்மராட்சி பிரதேசத்தை சுற்றிப் பார்வையிட்டனர்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச சுகாதாரக் குழுவினர் தென்மராட்சியிலுள்ள அகதிகள் முகாம்களை அம்புலன்ஸ் மூலம் சுற்றிப் பார்வையிட்டனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் நாலாயிரத்திற்கும் அதிகமான அகதிகள் குடும்பங்கள் வந்து தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் பரவலாக உள்ள பல பொது இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களின் சுகாதார வசதிகளையும், மருத்துவ வசதிகளையும் கவனிப்பதில் தமிழீழ விடுதலைப் புலிகள் தென்மராட்சிப் பிரதேச சுகாதாரக் குழுவினர் சுறுசுறுப்பாக இயங்கி வருகின்றனர்.

இந்த அகதிகளின் நலனைக் கவனிக்கு முகமாக அவர்களின் சுகாதார மருத்துவ வசதிகளை ஏற்படுத்து முகமாகவே நேற்று எட்டு அகதிகள் முகாம்களை சுற்றிப் பார்வையிட்டனர்.

வரணி. மந்துவில். மட்டுவில், சரசாலை, நுணாவில், கைதடி, நாவற்குழி, சாவகச்சேரி, ஆகிய பகுதிகளுக்கு விஜயம்செய்து பார்வையிட்டு சுகாதார மருத்துவ வசதிகளை ஏற்படுத்தினர். (35)

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

# யாழ். மாவட்டத்தில் மட்டும் 2லட்சத்துக்குமதிகமான அகதிகள்!

## உணவு, உடை, மருந்து நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

யாழ்-மாவட்டத்தில் அகதிகள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. விடுதலைப் புலிகளின் எதிர்ப்பை முறியடித்துக்கொண்டு தரை மார்க்கமாக வெளியே வர முடியாத ஸ்ரீலங்கா அரச படைகள் வானத்திலிருந்து விமானம், ஹெலிகொப்ரர் ஆகியனவற்றை பயன்படுத்தி மக்கள்மீது குண்டுகளை வீசியும் துப்பாக்கியால் சுட்டும் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

நேற்று எடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ புள்ளி விபரங்களின்படி 41793 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் இத்தாக்குதல்களால் வீடு வாசல்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

பொதுமக்களுக்கே சீனி, மா, பால்மா போன்ற உணவுப் பொருள்கள் பற்றாக்குறையாக இருக்கும் இவ்வேளையில் அகதிகளுக்கு நிவாரணம் அளிப்பதில் தொண்டர் ஸ்தாபனங்களும் அரச சமூகசேவைத் திணைக்களமும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிய வருகிறது.

கூடுதலான அகதிகள் சுகாதார வசதிகளுக்காக முகாம்களில் தங்காமல் நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரின் வீடுகளில் தங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (75)

## தென்மராட்சியில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் அமைப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் பெருந் தொகையாக வந்து கொண்டிருக்கும் அகதிகளின் சகலநலன்களையும்பேணுமுகமாக தென்மராட்சி அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஒன்றைத் தென்மராட்சிப் பிரிவுஉதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளையைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த தென்மராட்சி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் உறுப்பினர்களாக சாவகச்சேரி வர்த்தகர் சங்கத் தலைவர், பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள், அறவழி போராட்டக்குழு தலைவர், பாடசாலை அதிபர்கள், நகரசபை தலைவர், லயன்ஸ்கழக தலைவர் உட்பட பல பிரமுகர்களையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி வர்த்தகர் சங்கத் தலைவர் அகதிகள் புனர்வாழ்வுக்கென இதுவரை சகல வர்த்தகர்கள், வர்த்தக நிலையங்களிலும் அரிசி, பருப்பு உட்பட பணமாகவும் இதுவரை இருபதினாயிரம் ரூபா வரை சேகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். தென்மராட்சிப் பகுதியில் இதுவரை 20,000 அகதிக்குடும்பங்கள் வரை வந்து சேர்ந்துள்ளன. மேலும் வந்த வண்ணம் உள்ளன.

இந்த அகதிகளின் சுகாதாரம், மருத்துவம்போன்றவசதிகளைக் கவனிப்பதில் தமிழீழ விடுதலைப் புலிகள் சுகாதார குழு தலைவர் திருசெல்வராசா அம்புலன்ஸ் சகிதம் சகலஅகதி முகாம்களுக்கும் சென்று அவ்வப்போது அத்தியாவசிய தேவைகளைக் கவனித்து வருகின்றார். (35)

## சின்னச்செட்டிகுளத்தில் அகதிகளுக்கு ஆறுதல்!

(சாவகச்சேரி)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் தனியார் வாகனம் மூலம் வந்த தமிழ் அகதிகளுக்குச் சின்னச்செட்டிகுளத்தில் இரவுதங்குவதற்கான ஒழுங்குகளை அப்பகுதி பொதுமக்களும், தமிழீழ விடுதலைப் புலிகளும் வெகு அன்புடன் செய்து கொடுத்தனராம்.

அங்குள்ள தென்னிந்தியத் திருச்சபை புனித தேவாலயம் ஒன்றில் தான் இந்த அகதிகளை இரவு தங்க சகல ஏற்பாடுகளும்செய்ததுடன்,இரவு உணவு வசதிகளும் செய்ததோடு, மதவாச்சி இராணுவத்தினரால் தாக்கப்பட்ட காயக்காரர்களுக்குமுதலுதவியும் அளித்துள்ளதாக இந்த அகதிகள் பெரிதும் பாராட்டுத் தெரிவித்தனர். (35)

### வங்கியின்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இலங்கை வங்கி சுன்னாகம் கிளை

## கல்லூரி அகதி முகாமாகும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி தென்மராட்சி அகதிகள் முகாமாக ஆக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இப்பொழுது சாவகச்சேரி இந்துக்கல்லூரி மூடப்பட்டுள்ளது. (35)

## பதுங்கு குழி வெட்டியவரை ஷெல் தாக்கியது

(யாழ்ப்பாணம்)

தனது வீட்டில் பதுங்கு குழி வெட்டிக் கொண்டிருக்கும் போது பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல் விழுந்து வெடித்ததில் மாதா எனும் பதினாறு வயது இளைஞர் படுகாயமடைந்தார்.


இச்சம்பவம் இருதினங்களுக்கு முன்னர் கட்டுவனில் நடந்தது. இவர் தற்போது மானிப்பாய்அரசினர்வைத்தியசாலையில்சிகிச்சைபெற்றுவருகிறார். (ம)

### வெந்த வீட்டில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிப் போராளிகளால் இவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டார்கள்.

அடுத்தடுத்து நடைபெறும் குண்டுத் தாக்குதல்களால் நொந்து போய் இடம்பெயர்ந்துள்ள அப்பாவி மக்களின் துன்ப துயரங்களை உணராமல் அவர்களிடம் மிச்சசொச்சமாய் இருக்கும் பொருள்களையும் அபகரிக்கும் இத்தகைய கயவர்களுக்கு நல்ல தண்டனை




## தீவுப்பகுதி படகு பயணிகளை கடற்படை கூட்டிச்சென்றது

(புங்குடுதீவு)

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவிற்கு சென்ற பிரயாணிகள் படகொன்றை கடற்படை ரோந்துப் படகொன்று வழிமறித்து அழைத்துச் சென்றது.

இப் பயணிகள் படகு நெடுந்தீவுக் கரையை அண்மித்துக்கொண்டிருந்த வேளையில் ரோந்துப்படகில் அங்கு வந்த கடற்படையினர் இப்படகை தம்முடன் வருமாறு கூறி நெடுந்தீவிற்கு கொண்டு சென்றனர்.

இதனால் படகில் இருந்த பிரயாணிகள் கடந்த சில வருடங்களுக்கு முன் நெடுந்தீவுப் பயணிகளுக்கு குமுதினி படகில் நடந்தகதிதான் தங்களுக்கும் நடக்கப் போகிறதோ என எண்ணி அச்சமும் பீதியும் அடைந்த போதும் படையினர் படகையும் அதிலிருந்த பிரயாணிகளையும் தீவிர சோதனைக்குள்ளாக்கிய பின்பு இரவு ஒன்பது முப்பது மணியளவில் போக அனுமதித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து நெடுந்தீவு துறைமுகத்திற்கு இப்படகு இரவு பத்து மணியளவில் வந்து சேர்ந்தது குறிப்பிடத்தக்கது. (22)

### இடம்மாற்றம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து தெல்லிப்பழை அரச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகமும் அங்கிருந்து இடம் மாற்றப்பட்டுத் தற்போது சண்டிலிப்பாயில் தற்காலிகமாக இயங்கி வருவதாக அறியப்படுகிறது. (26)

### தூண்டிகுளத்----

### விடுதலைப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று மீண்டும் அங்கு வலியுறுத்திக்கூறிய அமைச்சர் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டுமென்று அரசு ஏற்கனவே மிகவும்தெளிவாக கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### தமிழர்களுக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவற்றை விநியோகிக்கும் வேலைகள் இன்றும் நாளை

### ஒரு வாரத்தில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னப்படை நேற்றுடன் யாழ் நகரில் மூன்றாவது தடவையாகப் பெரும் தாக்குதல் நடத்தியிருக்கிறது.

யாழ் நகரை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த விமானங்கள் நேற்று மூன்று தடவைகள் யாழ்நகர் மீது குண்டுகளை வீசின.

முதலாவது தாக்குதல் காலை பத்துமணியில் ஆரம்பித்து பதினொன்றரை மணி வரையும் நீடித்தது. இத்தாக்குதலில் யாழ்இந்துக்கல்லூரிப் பகுதியே பிரதான இலக்காக இருந்தது. இத்தாக்குதலில் குண்டுவீச்சு விமானங்கள் ஹெலிகப்டர்கள் பயன்படுத்தப்பட்டன.

இக்குண்டுவீச்சுத் தாக்குதலினால் கஸ்தூரியார்வீதி சிவகுருநாதன்வீதியில் இருந்த பல வீடுகளும், கராச் ஒன்றும் தாக்குதலுக்குள்ளாகி முற்றாகச் சேதமடைந்துள்ளன. கராச்சிலுள்ள வாகனங்களும் சேதமடைந்தன.

குண்டுவீச்சுகள் குடிமனைப் பகுதிகளாக இருந்தும் உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது தடவை குண்டு வீச்சு அவ்ரோ விமானத்தால் மேற்கொள்ளப்பட்டது. பிற்பகல் இரண்டு மணி

அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளையைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த தென்மராட்சி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் உறுப்பினர்களாக சாவகச்சேரி வர்த்தகர் சங்கத் தலைவர், பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள், அறவழி போராட்டக்குழு தலைவர், பாடசாலை அதிபர்கள், நகரசபை தலைவர், லயன்ஸ்கழக தலைவர் உட்பட பல பிரமுகர்களையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## வங்கியின்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இலங்கை வங்கி சுன்னாகம் கிளை முகாமையாளரினதும் ஊழியர்களினதும் தன்னலமற்ற சேவையினை வாடிக்கையாளர்கள் பாராட்டினர்.

வேலை நாட்களில் தினமும் ஒருமணி நேரம் வாடிக்கையாளர்கள் தங்கள் சேமிப்பு, நடைமுறைக் கணக்குகளில் பணத்தை வைப்பிலிடவும், மீளப்பெறவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தபாற் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளமையால் உள்ளூர், வெளிநாட்டு காசோலைகள், வங்கி உண்டியல்கள் என்பனவற்றை ஏற்க முடியாமல் உள்ளதாகவும்அறியப்படுகின்றது.

## குரும்பசிட்டி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதி சேதமடைந்துள்ளதாக அறியப்படுகின்றது.

குரும்பசிட்டி வவுணத்தம்பை வீதியில் உள்ள இ. பாலசுப்பிரமணியம், திருமதி திருமலர் ஆகியோருக்குச் சொந்தமான வீடுகளே இவ்வாறு சேதமடைந்துள்ளன.

## அகதிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுகண்ட வாகனத்திற்குப் பாதுகாப்பாக வந்த பொலீஸ் அதிகாரி மறுக்கவே, இராணுவத்தினர் தொடர்ந்து யாழ்ப்பாணம்வரஅனுமதிக்கவில்லை உடனே அப் பொலிஸ் அதிகாரி அந்தஅகதிகளையும் வாகனத்தையும் திருப்பி கொழும்பிற்குக் கொண்டுபோய் சேர்த்தாராம்.

மதவாச்சியில் வைத்து இராணுவத்தினரால் தாக்கப்பட்ட அப் பெண் அபாயகரமான நிலையில் கொழும்பு சம்மாங்கோட்டுப் பிள்ளையார் கோயிலில் விடப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தகவலை நேற்று கொழும்பிலிருந்து தனியார் வாகனங்கள் மூலம் யாழ்ப்பாணம் வந்த அகதிகள் தெரிவித்தனர். (35)

துள்ளார். தென்மராட்சிப் பகுதியில் இதுவரை 20,000 அகதிக்குடும்பங்கள் வரை வந்து சேர்ந்துள்ளன. மேலும்

வப்போது அத்தியாவசிய தேவைகளைக் கவனித்து வருகின்றார். (35)

# சின்னச்செட்டிகுளத்தில் அகதிகளுக்கு ஆறுதல்!

(சாவகச்சேரி)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் தனியார் வாகனம் மூலம் வந்த தமிழ் அகதிகளுக்குச் சின்னச்செட்டிகுளத்தில் இரவுதங்குவதற்கான ஒழுங்குகளை அப்பகுதி பொதுமக்களும், தமிழீழ விடுதலைப் புலிகளும் வெகு அன்புடன் செய்து கொடுத்தனராம்.

அங்குள்ள தென்னிந்தியத் திருச்சபை புனித தேவாலயம் ஒன்றில் தான் இந்த அகதிகளை இரவு தங்க சகல ஏற்பாடுகளும்செய்ததுடன்,இரவு உணவு வசதிகளும் செய்ததோடு, மதவாச்சி இராணுவத்தினரால் தாக்கப்பட்ட காயக்காரர்களுக்குமுதலுதவியும் அளித்துள்ளதாக இந்த அகதிகள் பெரிதும் பாராட்டுத் தெரிவித்தனர். (35)

# வங்கிக் கட்டிடம்தான் சேதம் ஆவணங்களுக்குச் சேதமில்லை

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பொம்மர், ஹெலி மற்றும் அவ்ரோ விமானத் தாக்குதலினால் முற்றாகச் சேதமுற்றயாழ். பிரதான வீதியில் அமைந்திருக்கும் தேசிய சேமிப்பு வங்கியில் வாடிக்கையாளர்களின் ஆவணப்பத்திரங்கள் எதுவும் சேதமுறவில்லை என அவ்வங்கியின் முகாமையாளர் ந. சிவபாலகணேசன் தெரிவித்தார்.

வாடிக்கையாளர்களின் பத்திரங்கள் எடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், வெகுவிரைவில் தேசிய சேமிப்பு வங்கி வேறொரு கட்டிடத்தில் இயங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## 4 நிபந்தனை . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் தமிழ்பேசும் மக்களை சிறிலங்கா இராணுவத்தினர் தாக்கி அகதிகளாக மாற்றியுள்ளமைக்கு தமது கண்டனத்தையும், அண்மைக் காலமாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் நடந்து வரும் விமானக் குண்டு வீச்சுக்கள் நிகழ்த்துவதற்கு எதிராக தமது கண்டனத்தையும்,

வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு ஏற்படுத்தியுள்ள பொருளாதாரத் தடையையும், சகல தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதற்கு தமது கண்டனத்தையும் ஈழவர் ஜனநாயக முன்னணி தெரிவித்துள்ளதோடு,

விடுதலைப் புலிகளுடன் தாமாக எதுவித நிபந்தனையும் இன்றித் தொடர்பு கொண்டு பேச்சுக்கள் ஆரம்பிக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவ் அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பது தொடர்பாக ஈழவர் ஜனநாயக முன்னணி விடுத்த அறிக்கையில்:

இதுவரை காலமும் இன ஒடுக்கலுக்குச் சட்டம் இயற்றும் கருவியாக விளங்கிவந்த ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் கடந்த ஒரு வருட காலமாக அங்கத்துவம் வகித்தமைக்கான காரணம், நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பெறுபேறாய் தமிழ்பேசும் மக்களுக்கு நன்மை பயக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டால் தேவையான ஆதரவினை வழங்கவேண்டிவரும் என்பதற்காகவேயாகும். ஆனால் இன வாதத்தைக் கக்கும் எரிமலையாக நாடாளுமன்றம் மாறுகையில் அதற்கு எம்மவரில் ஒரு சாரார் முண்டு கொடுக்கும் வகையில் செயற்படும் போது நாம் இந்த நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேறுவது தவிர்க்க முடியாததாகின்றது.

மேலும், எமதுமக்கள் அச்சமும், பதட்டமும் நிறைந்த சூழலில் அத்தியாவசியதேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே அவலப்படவேண்டிய வேளையில் கண்மூடித்தனமாக எமது மக்கள் கொல்லப்படும் இந்த நிலையிலும், கையாலாகாதவர்களாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பது வெட்கக்கேடான செயலாகவேநாம் உணருகின்றோம். எனவே நாடாளுமன்றத்திலிருந்துமுற்றாக விலகுவதற்கு முதற்படியாக நாடாளுமன்றத்தினை எதிர்வரும் 5 ஆம் திகதியில் இருந்து பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளோம். ஏற்கனவே சர்வகட்சிமாநாட்டின் அமர்வுகளிலிருந்துவிலகி நிற்கும் நாம் பாராளுமன்றத்தில் இருந்தும் விலகி நிற்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தது. இவர் தற்போது மானிப்பாய்அரசினர்வைத்தியசாலையில்சிகிச்சைபெற்றுவருகிறார். (ம)

## வெந்த வீட்டில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிப் போராளிகளால் இவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டார்கள்.

அடுத்தடுத்து நடைபெறும் குண்டுத் தாக்குதல்களால் நொந்து போய் இடம்பெயர்ந்துள்ள அப்பாவி மக்களின் துன்ப துயரங்களை உணராமல் அவர்களிடம் மிச்ச சொச்சமாய் இருக்கும் பொருள்களையும் அபகரிக்கும் இத்தகைய கயவர்களுக்கு நல்ல தண்டனை வழங்கவேண்டுமென பொதுமக்கள் போராளிகளிடம் கேட்டுக் கொண்டனர். அவர்கள் இருவரும் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (75)

## நெருக்கடியை. . .

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா பெறுமதி வாய்ந்த தங்க நகைகளைக் காணவில்லையாம். இது சம்பந்தமாக வீட்டுச் சொந்தக்காரியின் சகோதரியையும் கணவனையும் கைது செய்து விசாரணைக்குட்படுத்திய போதுஉண்மை வெளியானது. மனைவி விடுதலை செய்யப்பட்டார். கணவன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி கிளிநொச்சி ரயில் நிலையத்திலும், ஏனைய இடங்களிலும் சைக்கிள் கொள்ளையில் ஈடுபட்டவர்களை விடுதலைப் புலிகள் கைது செய்து விசாரணைக்குட்படுத்தி அவர்களின் கொள்ளையை அம்பலப்படுத்தினர். கொள்ளையர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

உதயநகர் நாகதம்பிரான் ஆலயத்திலிருந்து பொருட்களை கொள்ளையடித்தவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இது தவிர கனகபுரம் பிள்ளையார் கோயில் உண்டியலைத் தூக்கிச் சென்று அதனைஉடைத்துபணத்தைத் திருடிய அண்ணன், தம்பி இருவரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர், தான் விடுதலைப் புலி எனக் கூறிப் பொது மக்களைப் பயமுறுத்தி வந்ததாகவும் விடுதலைப் புலிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் உண்டியலில் இருந்து உடைத்து எடுத்த பணத்தைச் செலவு செய்து விட்டதாகத் தெரிவித்தனராம். (49)

படகை தம்முடன் வருமாறு கூறி நெடுந்தீவிற்கு கொண்டு சென்றனர்.

இதனால் படகில் இருந்த பிரயாணிகள் கடந்த சில வருடங்களுக்கு முன் நெடுந்தீவுப் பயணிகளுக்கு குமுதினி படகில் நடந்தகதிதான் தங்களுக்கும் நடக்கப் போகிறதோ என எண்ணி அச்ச

## இடம்மாற்றம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து தெல்லிப்பழை அரச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகமும் அங்கிருந்து இடம் மாற்றப்பட்டுத் தற்போது சண்டிலிப்பாயில் தற்காலிகமாக இயங்கி வருவதாக அறியப்படுகிறது. (26)

## தாண்டிகுளத்-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் காவல் அரண்களை சுற்றிவளைத்துத் தாக்க முற்பட்டனர்.

இதைத் தொடர்ந்தாற்போல் ஏற்பட்ட கடும் சண்டையில் முப்பது அளவிலான சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் ஆறுபேர் மரணமடைந்தனர். விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலைச் சமாளிக்க முடியாத இராணுவத்தினர் பின்வாங்கி வவுனியா நகருக்குச் சென்றனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில், லெப்டினன்ட் செந்தில், லெப்டினன்ட் அசோக், நித்திலன், மௌலிசன், கணேசலிங்கம், இன்பன் ஆகியோர் மரணமடைந்தவர்கள் ஆவர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தங்கள் வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## பாகிஸ்தானிடம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டக் கூடுமென்று சிறிலங்கா அரசு அஞ்சுவதாக திலகரத்தினா தெரிவித்ததாகவும் இந்தியாவில் தமிழ்ப் போராளிகள் தளமாக இந்தியா அனுமதிக்கப் போவதில்லையென்று இந்திய வெளியுறவுச் செயலர் உறுதியளித்ததாகவும் தெரிகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா விமானப் படை நேபாம் குண்டுகளை உபயோகிக்கவில்லையென்றும் திலகரத்தினா சொன்னதாகவும் கூறப்படுகிறது.

## ஓ நெக்கற்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கற்றிவ் இரத்தம் தேவைப்படுகிறது.

மேற்படி நபருக்கு உதவும் வகையில் ஓ குறூப் இரத்தத்தினை வடமராட்சிப் பகுதியிலுள்ள எந்த ஒரு வைத்தியசாலையிலும் கொடுத்து உதவலாம் எனப் பாதிப்புற்றோர் பராமரிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (68)

பிடத்தக்கது. (22)

## விடுதலைப் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கேஇடமில்லை என்று மீண்டும் அங்கு வலியுறுத்திக்கூறிய அமைச்சர் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டுமென்று அரசு ஏற்கனவே மிகவும்தெளிவாக கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழர்களுக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவற்றை விநியோகிக்கும் வேலைகள் இன்றும் நாளையும் ஆரம்பமாகும் என அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

இதேசமயம் அம்பாறை, திருக்கோணமலை பகுதிகளில் உள்ள சிங்கள அகதிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் இந்த நிவாரண உதவிகளை வழங்கியுள்ளனர். இவை தமிழர்களின் கடைகளில் இருந்து எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பகுதியே பிரதான இலக்காக இருந்தது. இத்தாக்குதலில் குண்டுவீச்சு விமானங்கள் ஹெலிகப்டர்கள் பயன்படுத்தப்பட்டன.

இக்குண்டுவீச்சுத் தாக்குதலினால் கஸ்தூரியார்வீதி சிவகுருநாதன்வீதியில் இருந்த பல வீடுகளும், கராச் ஒன்றும் தாக்குதலுக்குள்ளாகி முற்றாகச் சேதமடைந்துள்ளன. கராச்சிலுள்ள வாகனங்களும் சேதமடைந்தன.

குண்டுவீச்சுகள் குடிமனைப் பகுதிகளாக இருந்தும் உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது தடவை குண்டு வீச்சு அவ்ரோ விமானத்தால் மேற்கொள்ளப்பட்டது. பிற்பகல் இரண்டு மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல் கோட்டையைச்சுற்றியே இடம்பெற்றது.

இத் தாக்குதலைத் தொடர்ந்து மூன்றாவது தடவையாக இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் தொடர்ச்சியாக மூன்று மணியில் இருந்து தாக்குதல் மேற்கொண்டது. இத் தாக்குதலும் அனேகமாக கோட்டையைச் சூழவே இருந்தது. உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

# மரண அறிவித்தல்

## திரு. பரநிருபசிங்கம் இரட்ணராஜசிங்கம்

சரவணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற திருவாளர் பரநிருபசிங்கம் (சிங்கம் ஓவசியர்), பாக்கியத்தின் அன்புப் புதல்வன் இரட்ணராஜசிங்கம் 25.6.90 அன்று அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற இராஜசிங்கம்(Hatton), சிவயோகம் (Bogawanthalawa), சிவராஜசிங்கம், ஜெகதீஸ்வரி, அருள்ராஜசிங்கம் (Um ichy LTD; Colombo), விஜியராஜசிங்கம்(London), சறோஜினிதேவி (Germany), மணிமேகலை, வரதராஜசிங்கம் (விண்ணன்) (உரிமையாளர், ஈஸ்வர அம்பாள் & Co. ஸ்ரான்லி வீதி, யாழ்.), (ஈஸ்வரபகவான் & கொம்பனி, யாழ்ப்பாணம்), தர்மகுலராஜசிங்கம் (London) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சறோஜினிதேவி (Hatton), V. E. A. கனகசிவம்(Bogawanthalawa), மகேஸ்வரி, அமிர்தலிங்கம் (Nationai Housing Development Authority - Jaffna), வாசுகி (Colombo), ஜெகசிவாமணி (London) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம். இவ் அறிவித்தலை உரிய நேரத்தில் அறிவிக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகிறோம்.

தகவல்:

சரவணை மேற்கு,
வேலணை.

திருமதி பரநிருபசிங்கம்
பாக்கியம்

(R/394)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 -ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 03 ஆம் தேதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.